7. அரசினர் தீர்மானம்
விதி 31 ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெறவேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31-ஐ, நாளை, 8—4—1981 அன்று தளர்த்த வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

8. அறிவிப்பு.

வினாப் பட்டியல் தேதி மாற்றம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) : 8—4—1981 தேதியிட்டு, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள வினாக்கள் பட்டியல் வேறொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

அ. இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவு
விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

முன்னால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவின் ஆய்வுக்குழு கீழ்க்கண்ட 24 உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

1. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.
2. திரு. ஆர் பணிமாறன்.
3. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
4. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்.
5. திரு. சி. கோபால்.
6. திரு. செ. செம்மலை.
7. திரு. எம். சின்னராஜ்.
8. திரு. எஸ். ஜகத்ரட்சகன்.
9. திரு. கே. குப்புசாமி.